



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 225 | 07.2.2026 | SATURDAY | THAI : 24 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 225 | 07.2.2026 | சனிக்கிழமை | தை : 24 | விலை : ரூ.5/–


## சென்னை எழும்பூரில்

# “கார்ல் மார்க்ஸ் சிலை திறப்பு!”

சென்னை: பிப்.7-

எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் ரூ.85.80 லட்சம் செலவில் நிறுவப்பட்ட கார்ல் மார்க்ஸ் சிலையை முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: ‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுகூடுங்கள்’ என்ற பிரகடனத்தை உலகத் தொழிலாளர்கள் அனைவருக்குமான ஒரே முழக்கமாக, பொதுவுடைமைத் தத்துவத்தை வடித்துத் தந்த மாமேதை கார்ல் மார்க்ஸ் உருவச் சிலை சென்னையில் அமைக்கப்படும்’ என்று கடந்த 2025ம் ஆண்டு சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ் முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.




அதன்படி, சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலக வாயிலில் ரூ.85.80 லட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள கார்ல் மார்க்ஸ் சிலையை முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

சிலையின் அருகே வைக்கப்பட்டிருந்த அவரது உருவப் படத்துக்கும் மலர்தூவி மரியாதை செலுத்தினார். கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வு குறித்து முதல்வர் ஸ்டாலின் முதல்வர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், ‘மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை திறப்பு. சிவந்தது சென்னை! ‘இழப்பதற்கு அடிமைச் சங்கிலிகளைத் தவிர ஒன்றுமில்லை. அடைவதற்கோ பொன்னுலகம் காத்திருக்கிறது’ என்று உலகத் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டிய பொதுவுடைமைத் தத்துவத்தின் பிதாமகன் கார்ல் மார்க்ஸ் சிலை கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் நிலைகொண்டது.

நல்லவை எங்கிருந்து வந்தாலும் வணங்கி ஏற்றுக் கொள்வோம். அல்லவை ஆதிக்கம் செலுத்தப் பார்த்தால் தடுத்து நிறுத்துவோம். இதுதான் திராவிட மாடல்’’ என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ‘‘சென்னை பறக்கும் ரயில் சேவையை மெட்ரோ உடன் இணைக்க நடவடிக்கை’’ : அஸ்வினி வைஷ்ணவ்

சென்னை: பிப்.7-

சென்னையில் பறக்கும் ரயில் போக்குவரத்து சேவையை, மெட்ரோ ரயில் சேவையுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.



மாநிலங்களவையில் திமுக எம்பி வில்சன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்துள்ள அஸ்வினை வைஷ்ணவ், ‘‘சென்னையில் பறக்கும் ரயில் போக்குவரத்து சேவையை, மெட்ரோ ரயில் சேவையுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பறக்கும் ரயில் போக்குவரத்து சேவையின் சொத்துகள், பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை தமிழக அரசிடம் ஒப்படைப்பதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக, தமிழக அரசு மற்றும் ரயில்வே அமைச்சகம் இடையே விரிவான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. தற்போது ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அத்திப்பட்டு ரூ கும்மிடிபூண்டி இடையே 22.52 கிமீ நீளத்திற்கு 3வது மற்றும் 4வது வழித்தடம் அமைப்பதற்கான ஒப்புதல் அண்மையில் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அண்மை ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல்வேறு ரயில்வே திட்டங்களை செயல்படுத்துவதற்கான பட்ஜெட் ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகள், பாதுகாப்பு அம்சங்கள் உள்ளிட்ட பணிகளுக்காக 2009 முதல் 2014ம் ஆண்டுகளில் ரூ. 879 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. அதேநேரத்தில், 202526 ம் ஆண்டில் மட்டும் ரூ. 6,626 கோடி (ஏழரை மடங்கு கூடுதலாக) பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

01.04.2025 அன்று நிலவரப்படி தமிழகத்தில் 9 புதிய வழித்தடங்கள், 3 அகல ரயில் பாதையாக மாற்றும் திட்டங்கள், 3 இரட்டை வழிப்பாதை அமைத்தல் என 1,700 கிமீ நீளத்திற்கு ரூ.22,808 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது’’ என தெரிவித்துள்ளார்.



■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை வடக்குத் தெரு ஸ்ரீ சுடலை ஆண்டவர் திருக்கோவில், ஸ்ரீ சுடர் இந்து இளைஞர் மன்ற காப்பாளரும், திசையன்விளை நகர நுகர் பொருள் விநியோகஸ்தகர்கள் சங்க பொருளாளருமான தொழிலதிபர் லிங்கம் அவர்களுக்கு, திசையன்விளை ஸ்ரீ சுடர் இந்து இளைஞர் மன்ற நண்பர்கள் மற்றும் ஸ்ரீ அற்புத விநாயகர் ஐயப்ப பக்தர்கள் சார்பாக பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழா ஏற்பாடுகளை மும்பை மலையாண்டி குரூப்ஸ் நிறுவனர் முத்துகிருஷ்ணன் மற்றும் தமிழினி திரைப்பட தயாரிப்பாளரும் சக்கர வியூகம் செய்தியாளருமான டிபி சரவணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

## குடிநீர் பாட்டில்களில் ‘மைக்ரோ பிளாஸ்டிக்’ எச்சரிக்கை வாசகங்கள் இடம்பெற சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை: பிப்.7-

குடிநீர் பாட்டில்களிலும் மைக்ரோ பிளாஸ்டிக் கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்த நிலையில், அது குறித்த எச்சரிக்கை வாசகங்களை இடம்பெறச் செய்ய வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



குடிநீர் பாட்டில்களில் மைக்ரோ பிளாஸ்டிக் எனும் பிளாஸ்டிக் நுண்துகள்கள் கண்டறியப்பட்டதாக வெளியான செய்தியின் அடிப்படையில் சென்னை உயர் நீதிமன்ற சிறப்பு அமர்வு தாமாக முன்வந்து வழக்கை எடுத்துக்கொண்டது. இந்த வழக்கு நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி அடங்கிய அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய சுகாதார துறை சார்பில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் தாக்கல் செய்த அறிக்கையில், உணவுப் பொருட்களை பிளாஸ்டிக் பைகளில் பொதிந்து விற்பனை செய்வது தொடர்பாக ஏற்கெனவே வழிகாட்டு விதிகள் வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பிளாஸ்டிக் நுண்துகள்களால் ஏற்படும் பாதிப்பு குறித்து லக்னோ, கொச்சி, பிலானி மூன்று இடங்களில் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இமாச்சல பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட ஆறு மாநிலங்களில் குடிநீர் பாட்டில்களின் மாதிரிகளில் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்தபோது, அவற்றில் மைக்ரோ பிளாஸ்டிக் இருப்பது கண்டறியப் பட்டுள்ளதாகவும், அதேபோல பிளாஸ்டிக் பாக்கெட்களில் அடைத்து விற்கப்படும் உப்பு, சர்க்கரையிலும் மைக்ரோ பிளாஸ்டிக் இருப்பதாக தெரியவந்துள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையை ஆய்வு செய்த நீதிபதிகள், ‘மைக்ரோ பிளாஸ்டிக்கால் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், விலங்குகளுக்கும் தீங்கை ஏற்படுத்தக்கூடியது; அன்றாடம் பயன்படுத்தும் குடிநீர் பாட்டில்களில் மைக்ரோ பிளாஸ்டிக் துகள்கள் கண்டறியப்பட்டுள்ளதால், அவற்றில் எச்சரிக்கை வாசகங்கள் இடம்பெறச்செய்ய வேண்டும் என குடிநீர் பாட்டில் உற்பத்தி நிறுவனங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்த வேண்டும்’ என உத்தரவிட்டனர்.

ஆய்வுகள் ஆரம்ப நிலையில் இருப்பதால், எச்சரிக்கை வாசகங்களை இடம்பெறச் செய்தால் மக்களிடையே குழப்பம் ஏற்படும் என இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, ஆய்வுகளை விரைந்து முடிக்க அறிவுத்திய நீதிபதிகள், அதுவரை எச்சரிக்கை வாசகங்களை ஒட்டவேண்டும் என குடிநீர் பாட்டில் நிறுவனங்களுக்கு உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தனர்.

## மேட்டுப்பட்டி இராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பூரண கும்பம் மரியாதை

சின்னாளபட்டி, பிப்.07

சின்னாளபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட மேட்டுப்பட்டி அருள்மிகு இராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 04.02.2026 அன்று கணபதி ஹோமத்துடன் விழா ஆரம்பமானது. அதன்பின் தொடர்ச்சியாக யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் யாகசாலையில் இருந்து கடம் புறப்பாடு நடைபெற்றது. 9.40 மணியளவில் கருடன் வட்டமிட கோபுர கலசத்திற்கு சிவாச்சாரியார்கள் யாகசாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகத்தை நிறைவு செய்தனர்.



அதன்பின் தொடர்ச்சியாக அம்மனுக்கு 16 வகை அபிசேகம் செய்யப்பட்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. கும்பாபிஷேக விழாவில் கலந்துகொள்ள வந்த திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு, தேவாங்கர் மகாசபை தலைவர் அமுதம் எம்.ராஜேந்திரன், செயலாளர் பி.சுப்பிரமணி, பொருளாளர் பாலாஜி டெக்ஸ் எம்.வேலுமணி, துணைத்தலைவர் எ.தண்டபாணி, துணைச் செயலாளர் ஜே.அய்யப்பன், துணைத்தலைவர் கே.டி.ஆர். கிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் செந்தில்குமார், சுரேஷ் தலைமையில் சிவாச்சார்யார்கள் பூரண கும்ப மரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதன் பின்னர் கோவிலுக்கு வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கோவில் கமிட்டியார்கள் சார்பாக மாலை மற்றும் சால்வை அணிவித்து பரிவட்டம் கட்டி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

கோவில் நிர்வாகிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பாரம்பரியம் மிக்க கோவிலுக்கு வந்து, மக்களை சந்தித்தது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார். நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, செயல் அலுவலர் இளவரசி, பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், மற்றும் பேரூர் கழக பொறுப்புக்குழு உறுப்பினர்கள், மகளிர் அணியினர், வார்டு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ‘‘சட்டப்பேரவை தேர்தலுக்காக சில புதிய முயற்சிகள்தலைமை தேர்தல் ஆணையர் விவரிப்பு



புதுடெல்லி, பிப்.7-

வர இருக்கும் சட்டப்பேரவை தேர்தல்களுக்காக சில புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல்கள் சுதந்திரமாக, நியாயமாக, வெளிப்படையாக நடைபெறுவதை மத்திய தேர்தல் பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கம், அசாம் ஆகிய 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்கள் இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, மத்திய பார்வையாளர்களுக்கான விளக்கக் கூட்டம் டெல்லியில் நேற்று தொடங்கி இன்று நிறைவடைந்தது.

மூன்று கட்டங்களாக நடைபெற்ற இந்த விளக்கக் கூட்டத்தில், 714 பொதுப் பார்வையாளர்கள், 233 காவல் துறை பார்வையாளர்கள், 497 செலவினப் பார்வையாளர்கள் உட்பட 1,444 அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, தேர்தல் நடத்தை, செலவினம், தகவல் தொழில்நுட்பம், ஊடகம் தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து பார்வையாளர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்த செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுக்வீர் சிங் சந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோர் இதில் கலந்து கொண்டு விளக்கங்களை அளித்தனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய ஞானேஷ் குமார், ‘‘இந்தியாவில் தேர்தல்கள் சட்டத்தின்படியும், தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுறுத்தல்களின்படியும் நடத்தப்படுகின்றன. இதில் இருந்து விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

சட்டத்தையும் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களையும் தேர்தல் பார்வையாளர்கள் பின்பற்ற வேண்டும். கடந்த ஓராண்டில் தேர்தல் ஆணையத்தால் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. வர இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல்களுக்காக சில புதிய முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரமான, நியாயமான, வெளிப்படையான முறையில் தேர்தல்கள் நடப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்’’ என கேட்டுக்கொண்டார்.

# அமெரிக்கா உடனான ஒப்பந்தம்வளர்ச்சிக்கு வழிவகுக்கட்டும்



இந்தியா, பிப்.7-

ஏற்றுமதிப் பொருட்களுக்கான வரியைக் குறைப்பது தொடர்பாக இந்தியா அமெரிக்கா இடையே ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம் ஒருபுறம் நம்பிக்கை அளிக்கும் வகையிலும், மறுபுறம் புதிய கேள்விகளுக்கு வழிவகுக்கும் வகையிலும் அமைந்திருப்பது பேசுபொருளாகியிருக்கிறது.2024ஆண்டு நிலவரப்படி, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்காவில் 3.3% வரியும், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இந்தியாவில் 17% வரியும் விதிக்கப்பட்டிருந்தன.

இதுதொடர்பாக, இந்தியாவைக் கடுமையாக விமர்சித்துவந்த டிரம்ப், 2025இல் பரஸ்பர வரியாக 25 சதவீதத்தை இந்தியப் பொருட்களுக்கு விதித்தார். பின்னர்.உக்ரைன் மீது போர் நடத்திவரும் ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதற்காக 25% அபராத வரி விதித்ததால், இந்தியப் பொருட்களுக்கான வரி 50% ஆக உயர்ந்தது. இதன் காரணமாக, இந்தியாவின் பல்வேறு தொழில்கள் பாதிக்கப்பட்டன.

# அல் பலா பல்கலை. தாளாளர் மோசடி வழக்கில் கைது




புதுடெல்லி, பிப்.7-

கடந்த ஆண்டு டெல்லி செங்கோட்டை அருகே நடந்த கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் தொடர்புடைய சில மருத்துவர்கள் ஹரியனா அல் பலா பல்கலைக் கழகத்துடன் தொடர்பில் இருந்தது விசாரணையில் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர சோதனையில், பல்கலைக்கழகத்தின் நிதி முறைகேடுகள் மற்றும் போலி ஆவணங்கள் குறித்த உண்மைகள் வெளி வந்தன.

இதுதொடர்பாக அல் பலா பல்கலைக்கழகத்தின் தாளாளர் ஜவாத் அகமது சித்திகி மற்றும் அல்பலாஹ் அறக்கட்டளை மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சட்ட விரோத பணப் பரிமாற்ற ஜவாத் அகமது சித்திகி குற்றச்சாட்டின் கீழ் அமலாக்கத்துறை அளித்த புகாரின் பேரில் டெல்லி போலீஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு தேவையான யுஜிசி அங்கீகாரம் மற்றும் என் ஏஏசி தகுதிச் சான்றிதழ் இருப்பதாகப் பொய்யான தகவல்களைக் கூறி மாணவர்களிடம் இருந்து பல கோடி ரூபாய் கட்டணமாகப் பெற்று ஏமாற்றியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சுமார் ரூ.493 கோடி வரை மாணவர்களிடம் இருந்து சட்ட விரோத நிதி திரட்டப்பட்டிருப்பதாக அமலாக்கத்துறை குற்றப் பத்திரிகையில் தெரிவித்துள்ளது.

இந்த மோசடி வழக்கில் தொடர்புடைய சுமார் 140 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் முடக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஜவாத் அகமது சித்திகியை போலீஸார் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தினர். அவரை 4 நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

# மேகாலயாவில் சுரங்க விபத்தில் 16 தொழிலாளர்கள் உயிரிழப்பு

ஷில்லாங், பிப்.7-

மேகாலயாவின் கிழக்கு ஜைந்தியா ஹில்ஸ் மாவட்டம், தாங்ஸ்கு பகுதியில் சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் நேற்று காலையில் வெடி விபத்து ஏற்பட்டது.

இது குறித்து மாநில காவல்துறை இயக்குநர் நோங்ராங் கூறுகையில், “இதுவரை 16 உடல்களை மீட்டுள்ளோம். வெடி விபத்து ஏற்பட்ட நேரத்தில் சுரங்கத்துக்குள் இருந்த தொழிலாளர்களின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என கருதுகிறோம். வெடி விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இது குறித்து விசாரணை நடத்தப்படும்" என்றார்.

தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (என்ஜிடி) கடந்த 2014ல் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பாதுகாப்பு அபாயங்களை காரணம் காட்டி மேகாலயாவில் 'எலி வளை' நிலக்கரிச் சுரங்கம் மற்றும் பிற அறிவியலுக்குப் புறம்பான சுரங்க முறைகளுக்கு தடை விதித்தது.

# குடமுழுக்கில் யாருக்கும் முதல் மரியாதை இல்லை: உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு



மதுரை, பிப்,7-

மேலப்பனங்காடி கிராமத்தில் உள்ள அய்யனார் கோயில், முனியாண்டி சுவாமி கோயில், அருள்மிகு கருப்பசாமி கோயில், முத்துமாரியம்மன் கோயில் குடமுழுக்கில் யாருக்கும் முதல் மரியாதை அளிக்கக் கூடாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த ரத்தினம் என்பவர் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், ''மதுரை மாவட்டம் மேலப்பனங்காடி கிராமத்தில் உள்ள அய்யனார் கோயில், முனியாண்டி சுவாமி கோயில், அருள்மிகு கருப்பசாமி கோயில், முத்துமாரியம்மன் கோயில் குடமுழுக்கை நடத்துவதற்காக முத்தரையர், மறவர், மற்றும் ஆதி திராவிடர் சமூக உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்க உத்தரவிட வேண்டும்’’ என்று கோரி இருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஸ்ரீமதி, "மதுரை மாவட்டம் மேலப்பனங்காடி கிராமத்தில் அமைந்துள்ள இந்த கோயில்களுக்கான குடமுழுக்கு பிப்ரவரி 8ம் தேதி நடைபெற உள்ளது. இந்த கோயில்கள் அனைத்தும் ஒரே கிராமத்தில் அமைந்துள்ளன.

அந்த கிராமத்தில் 5 சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர். இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், இந்து சமய அறநிலையத்துறை தகுதியான நபர் ஒருவரை நியமிக்க உத்தரவிட்டது. அதன் அடிப்படையில் நபர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

இதனிடையே, ராஜேஷ் கண்ணன் என்பவர் குடமுழுக்கு நடத்த உரிமை கோரி உள்ளார். ஆனால் குடமுழுக்கு என்பது தனி நபரால் நடத்தப்படக்கூடாது.

குறிப்பாக ஐந்து சமுதாய மக்கள் இருக்கையில், குழு அமைக்கப்படுவது அவசியமானது. ஆகவே இந்து சமய அறநிலையத் துறையால் நியமிக்கப்பட்ட நபர், ஒவ்வொரு சமுதாயத்தில் இருந்தும் ஒரு நபரை உறுப்பினராக கொண்ட குழுவை அமைக்க வேண்டும். குழுவோடு இணைந்து குடமுழக்கை நடத்த வேண்டும்.

விழாவில் தனி நபருக்கோ அல்லது சமூகத்திற்கோ முதல் மரியாதை வழங்கப்படக்கூடாது. எவ்விதமான பாகுபாடும் இல்லாமல் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும். ராஜேஷ் கண்ணன் இந்து சமய அறநிலையத் துறையால் நியமிக்கப்பட்ட நபரிடமும், அவர் அமைக்கும் குழுவிடமும் குடமுழுக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்" என உத்தரவிட்டு வழக்கை நீதிபதி முடித்து வைத்தார்.

# குஜராத் அகமதாபாத்தில் நடந்த கேளிக்கை விருந்தில் வெளிநாட்டு மது வகை, ஹுக்கா விநியோகம்



அகமதாபாத், பிப்.7-

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடந்த கேளிக்கை விருந்தில் வெளிநாட்டு மது வகைகள், ஹுக்கா விநியோகம் செய்யப்பட்டது தெரியவந்துள்ளது. இந்த விருந்தில் கலந்துகொண்ட மருத்துவர்கள், தொழிலதிபர்கள் உட்பட 81 பேர் சிக்கியுள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் பூரண மதுவிலக்கு சட்டம் அமலில் உள்ளது. அங்கு வெளிநாட்டினர் மற்றும் அனுமதி பெற்றவர்கள் மது அருந்த முடியும் என்ற நிலை உள்ளது. இந்நிலையில் அகமதாபாத்தில் உள்ள நிர்வாணா கிரீன்ஸ் வீக்கெண்ட் ஹோம்ஸ் என்ற தனியார் விடுதியில் நேற்று முன்தினம் அனுமதியின்றி மது விருந்து நடைபெறுவதாக போலீஸாருக்குத் தகவல் வந்தது. இதையடுத்து போலீஸார் அங்கு சென்று சோதனை நடத்தினர்.

அப்போது அங்கு அனுமதியின்றி வெளிநாட்டு மதுவகைகள், ஹுக்கா ஆகியவை விருந்தினர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து அந்த விருந்தில் கலந்து கொண்ட 81 பேரை போலீஸார் பிடித்து விசாரித்தனர். இதில் 43 பேர் ஆண்கள், 38 பேர் பெண்கள். இதில் பலர் கட்டிட நிறுவன அதிபர்கள்,மருத்துவர்கள், தொழிலதிபர்கள் என விசாரணையில் தெரியவந்தது. அகமதாபாத்தைச் சேர்ந்த ஒரு தொழிலதிபரின் 25ம் ஆண்டு திருமணக் கொண்டாட்டத்துக்காக இந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்கிருந்த வெளிநாட்டு மதுவகைகள், ஹுக்கா பைப்புகள், 20க்கும் மேற்பட்ட விலை உயர்ந்த சொகுசு கார்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக அகமதாபாத் சனந்த் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மது விலக்கு அமலில் உள்ள மாநிலத்தில் தனியார் விடுதியில் அனுமதியின்றி மது வகைகள் பரிமாறப்பட்டது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# பஞ்சாப் ஆம் ஆத்மி பிரமுகர் லக்கி ஓபராய் சுட்டுக் கொலை

ஜலந்தர், பிப்.7-

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் ஆம் ஆத்மி கட்சி பிரமுகர் லக்கி ஓபராய் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலை சம்பவம் அந்த பகுதியில் உள்ள சாஹிப் குருத்வாராவுக்கு வெளியில் அரங்கேறியது.

சாஹிப் குருத்வாராவில் காலை வழிபாட்டை முடித்துக் கொண்டு வெளியில் வந்த லக்கி ஓபராய், தனது காரில் புறப்பட்டுள்ளார். அப்போது அடையாளம் தெரியாத இருவர் இருசக்கர வாகனத்தில் வந்து அவரை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தி உள்ளனர். இதில் அவரது உடலில் ஐந்து குண்டுகள் பாய்ந்தன. தொடர்ந்து அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் உயிரிழந்ததை மருத்துவர்கள் உறுதி செய்தனர்.

மக்கள் கூட்டம் அதிகம் நிறைந்த நகர பகுதியில் இந்த கொலை நடந்துள்ளது. அந்த இடம் இப்போது போலீஸ் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. காவல் துறையினர் முதற்கட்ட விசாரணையை தொடங்கி உள்ளனர். இதையடுத்து மாநிலத்தில் நிலவும் மோசமான சட்டம் ஒழுங்கை சுட்டிக்காட்டி ஆளும் ஆம் ஆத்மி அரசை எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.

உயிரிழந்த லக்கி ஓபராயின் மனைவி ஆம் ஆத்மி சார்பில் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியை தழுவினார். ஜலந்தர் கண்டோன்மெண்ட் தொகுதியின் ஆம் ஆத்மி பொறுப்பாளர் ராஜ்விந்தர் கவுருக்கு லக்கி ஓபராய் நெருக்கமானவர் என தகவல் வெளியாகி உள்ளது.

# ‘‘அரசியல் தலைவர்களை தரக்குறைவாக தாக்குவதா?’’ முதல்வர் ஸ்டாலினுக்கு இபிஎஸ் கண்டனம்



சென்னை, பிப்.7-

அரசியல் ரீதியாக களத்தில் எதிர்த்து நிற்கும் அரசியல் தலைவர்களை தனிப்பட்ட முறையில் தாக்குவதும், தரக்குறைவாகப் பேசுவதும் ஸ்டாலினின் வாடிக்கையாகிவிட்டது என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “‘ஆனைக்கு அறம்’ என்றால் ‘குதிரைக்கு குர்ரம்’ என்று சொல்வதையும், ‘பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் ரூ கொட்டைப் பாக்கின் விலை சொல்வதையும்’ வாடிக்கையாகக் கொண்ட தமிழகத்தின் ‘பொம்மை முதல்வர்’ ஸ்டாலின், ஆட்சி அதிகாரத்தில்தான் ஸ்டிக்கர் ஒட்டுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தால், அரசியல் ரீதியாக அதிமுக செயல்பாடுகளையும் கார்பன் காப்பி அடிக்கத் தொடங்கியிருப்பது, விலா நோக சிரிக்க வைக்கிறது.

2021 தேர்தல் நேரத்தில் திமுக சார்பில் ஸ்டாலின் அளித்த 525க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளில், நான்கில் ஒரு பங்கைக் கூட நிறைவேற்றவில்லை என்ற உண்மையை, மக்களுக்கு நாங்கள் நாள்தோறும் சொல்லி வருகிறோம். கவர்ச்சிகரமாக பல பெயர்களை வைத்து மக்களை ஏமாற்றும் இந்த விடியா அரசின் செயலை விளக்கும் வகையில், கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் ‘திமுகவின் உருட்டுக்கடை அல்வா’ ஒன்றை தமிழக மக்களிடம் வழங்கினோம்.

மத்திய அரசிடம் வாதாடியோ, போராடியோ, இணக்கமாகப் பேசியோ, தமிழக மக்களுக்குத் தேவையான எந்தவொரு நல்ல திட்டங்களையும் கொண்டுவர வக்கற்ற ஸ்டாலின் தலைமையிலான நிர்வாகத் திறனற்ற அரசு, மத்திய அரசு கேட்டதைத் தரவில்லை என்று வாய் ஜாலம் காட்டிக்கொண்டிருக்கிறது.

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு முறையாக திட்ட அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கத் தவறிய திராணியற்ற ஸ்டாலின் தலைமையிலான அரசு, தங்களுடைய இயலாமையை, தோல்வியை மறைக்க, மத்திய அரசு போதிய நிதியை தமிழகத்திற்கு தரவில்லை; ரயில்வே திட்டங்கள் வரவில்லை என்றெல்லாம் புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டு மக்களுக்கு நிஜமாக அல்வா கொடுக்கும் பம்மாத்து வேலையை அரங்கேற்றி வருகிறது.

ஏமாற்று மாடல் திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் நாளை எதிர்பார்த்து தமிழக மக்கள் ஆவலோடு காத்திருக்கும் நிலையில், மீண்டும் ஆட்சிக்கு வருவோம்; திமுகவின் 2.0 ஆட்சியில் தமிழகம் சுபிட்சம் பெறும் என்றெல்லாம் மக்களின் காதுகளில் காகிதப் பூ சுற்றி வருகிறார் ஸ்டாலின்.

‘பேஸ்மென்ட் வீக் ரூ பில்டிங் ஸ்டிராங்’ என்று ஒரு படத்தில் வரும் நகைச்சுவை காட்சியைப் போல, இவருடைய ஆட்சியே ஆட்டம் கண்டு இன்றோ, நாளையோ என்று ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில், காலையில் எழுந்தவுடன் மேக்கப் போட்டுக்கொண்டு, கண்ணாடி முன் நின்று வெற்றி, வெற்றி என்று இம்சை அரசின் 23ம் புலிகேசி போல் ஸ்டாலின் கூக்குரல் இட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, தமிழக மக்கள் கைகொட்டி சிரிக்கிறார்கள்.

வரும் சட்டமன்றத் தேர்தலில் தனக்கு தோல்வி நிச்சயம் என்பதை ஸ்டாலின் நன்கு உணர்ந்துள்ளார். அதன் விளைவு, அரசியல் ரீதியாக, தர்க்க ரீதியாக, நாகரீகமாக களத்தில் எதிர்த்து நிற்கும் அரசியல் தலைவர்களை தனிப்பட்ட முறையில் தாக்குவதும், தரக்குறைவாகப் பேசுவதும், ஒருவரை அசிங்கப்படுத்திவிட்டால், அவர்கள் மானத்திற்கு பயந்து களத்தில் இருந்து ஓடிவிடுவார்கள் என்று அல்பத்தனமாக கருதுவதும் ஸ்டாலினின் வாடிக்கையாகிவிட்டது.

‘சேற்றிலும், அசிங்கத்திலும் கல் வீசினால் அந்த சேறும், அசிங்கமும் தன்மீதுதான் படும்’ என்பதையும்; ‘மல்லாந்து படுத்து எச்சில் துப்பினால் அது தன் மார்பில் தான் விழும்’ என்பதையும் உணராமல், தான் வகிக்கும் பதவிக்கு உள்ள கவுரவத்தையும், மரியாதையையும், தகுதியையும் எண்ணிப் பார்க்காமல் உளரித் திரிவதை, ஸ்டாலின் இத்தோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்.

தமிழக மக்களை, தேர்தல் களத்தில் நெஞ்சுரத்தோடு தலை நிமிர்ந்து அதிமுக சந்திக்கும். எங்களுடைய ஆட்சியின் மாட்சிமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி வாக்கு சேகரிக்கும் வல்லமை எங்களுக்கு உண்டு. நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், கள்ளமில்லா உள்ளமும் கொண்டவர்கள் நாங்கள். கடந்த ஐந்தாண்டுகால விடியா திமுக ஆட்சியில், ஒருசில மக்களின் நாக்கில் தேன் தடவும் வேலையைத் தவிர, தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்களை செயல்படுத்தி உள்ளீர்கள் என்பதை வெளிப்படையாக மக்களிடம் தெரிவித்து, ஓட்டு கேட்க ஸ்டாலின் தயாரா? அப்படி அவர் களத்திற்கு வந்தால், அவருக்கு கிடைக்கப் போவது 2.0 அல்ல ரூ வெறும் ‘0’தான்” என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்

# அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் மே மாதம் முழுவதும் விடுமுறை அரசாணை வெளியீடு



சென்னை, பிப்,7-

சென்னை மே மாதம் முழுவதும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ள அரசாணை தொடர்பாக தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவர் வெ.மகேந்திரகுமார் கூறியதாவது,

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பிரதான இணைப்புச் சங்கமாக திகழ்ந்து வரும் தமிழ்நாடு சமூக நலத்துறை அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர்கள், ஒன்றியம் சார்பாக மே மாதம் அனைத்து பள்ளிகளும் விடுமுறை அளிக்கும் பொழுது சத்துணவு பணியாளர்கள் மே மாதம் முழுவதும் விடுமுறையை அளிக்கப்படுகிறது. ஆனால் அங்கன்வாடி மையங்கள் மட்டும் ஒவ்வொரு ஆண்டும்


மே மாதம் 15 நாட்கள் செயல்பட்டு வந்தது.

இந்த நிலையில் அனைத்து அங்கன்வாடி மையங்களும் கல்வித்துறை மற்றும் சத்துணவு உள்ளிட்ட துறைகள் போல மே மாதம் முழுவதும் அதாவது 31 நாட்களுக்கு விடுமுறை அளிக்க வேண்டும் என நமது சங்கத்தின் சார்பாக தலைமைச் செயலகம் உள்ளிட்ட அனைத்து உயர் அலுவலர்களுக்கும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு வந்தது.

அங்கன்வாடி பணியாளர்களின் சங்கங்களின் கோரிக்கையை தாயுள்ளத்துடன் பரிசீலனை செய்து அங்கன்வாடி மையங்களுக்கு மே மாதம் முழுமையாக 31 நாட்கள் விடுமுறை* என்ற அரசாணை 06 02 2026 பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு சமூக நலன் மற்றும் உரிமை துறை அமைச்சர் கீதாஜீவன் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுக்கும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவர் வெ.மகேந்திரகுமார், மாநில பொருளாளர் திலகர், மாநில தணிக்கையாளர் சண்முக மூர்த்தி, அங்கன்வாடி பணியாளர் மற்றும் உதவியாளர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் தமிழ்மொழி, மாநில பொருளாளர் செலின்சோபியா, குமார், ஆறுமுகம், மீனாட்சி, வாசுகி ஆகியோர் கூட்டாக நன்றி தெரிவித்தனர்.

# “கமல் பேச்சு ... புரிஞ்சா எனக்கு சொல்லுங்க...” வானதி சீனிவாசன் கிண்டல்





கோவை, பிப.7-

‘‘மாநிலங்களவையில் கமல்ஹாசன் பேசியது எனக்குப் புரியவில்லை. ஏற்கெனவே அவர் பேச்சு புரியாததால்தான் கோவை மக்கள் தோற்கடித்தனர்’’ என பாஜக மகளிரணி தேசிய தலைவர் வானதி சீனிவாசன் எம்எல்ஏ தெரிவித்தார்.

கோவை கணபதி ஓம்சக்தி நகரில் ‘உங்கள் குரல் எங்கள் செயல்’ என்ற அலைபேசி செயலி மூலம் மக்களின் கருத்துகளையும், பிரச்சினைகளையும் அறிந்துகொள்ளும் திட்டம் பாஜக சார்பில் நேற்று தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் முதல்முறையாக இந்த திட்டத்தை தமிழக பாஜக தேர்தல் இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி தொடங்கி வைத்தார்.

இதில் பாஜக மகளிரணி தேசியத் தலைவர் வானதி சீனிவாசன் உட்பட பலர் பங்கேற்றனர். இதையடுத்து கோவை வடக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட சங்கனூரில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மோடி முகாம் நிகழ்வை இருவரும் தொடங்கி வைத்து நல திட்ட உதவிகளை வழங்கினர்.

பின்னர் வானதி சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எங்களுக்கும், மக்களுக்கும் ஒரு கனவு இருக்கிறது. மக்களுக்கு எதிரான திமுக அரசை வீட்டுக்கு அனுப்புவது தான் அந்தக் கனவு. வரும் தேர்தலில் அந்தக் கனவை தமிழ்நாட்டு மக்கள் நிறைவேற்றுவார்கள். நான் கோவை வடக்கு தொகுதியில் போட்டியிடுவது குறித்து கட்சி முடிவெடுத்து தலைமை அறிவிக்கும். தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளிலும் எங்கள் கூட்டணி வெற்றி பெறும். அதிமுக அரசின் மானிய விலையில் இருசக்கர வாகனத் திட்டம், தாலிக்கு தங்கம், மடிக்கணினி உள்ளிட்ட பல்வேறு சமூக நலத்திட்டங்களை நிறுத்தி விட்டார்கள்.

மாநிலங்களவையில் கமல்ஹாசன் என்னென்னமோ பேசினார். அவரது பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாகி கிண்டல் செய்யப்படுவதாக சொல்கின்றனர். கமல் பேச்சு எனக்கு புரியவே இல்லை. அவர் பேச்சு புரிந்தால் எனக்கு சொல்லுங்கள். ஏற்கெனவே கோவையில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் கமல்ஹாசன் போட்டியிட்டபோது அவர் பேச்சு புரியாததால்தான் மக்கள் அவரைத் தோற்கடித்து இங்கிருந்து அனுப்பி வைத்தனர். ஆனால், அவர் எதற்காக நிறுத்தப்பட்டாரோ அந்த முதலாளிகள் அவரை இப்போது டெல்லிக்கு அனுப்பி இருக்கின்றனர். அவர்களுக்காவது கமல் நியாயம் செய்யக் கூடாதா?

பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, தந்தையின் உடல்நிலையை காரணம் காட்டி, அவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் சுற்றுப் பயணத்தை மட்டும் மாற்றித் தரும்படி கூறி உள்ளார். சட்டப் பேரவைக்குள் அண்ணாமலை வரவேண்டும் என்பதே எங்கள் அனைவரின் விருப்பம். இதனை வேண்டுமென்றே பூதாகரமாக மாற்றுகின்றனர். செங்கோட்டையன் முதிர்ந்த அரசியல்வாதி. ஆனால் காலத்தின் கொடுமையால் அவர், இப்போது கட்சி ஆரம்பித்துள்ள நடிகரோடு சேர்ந்து நிற்கிறார் என்பதை பார்க்க எங்களுக்கு வேதனையாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

தமிழக பாஜக தேர்தல் இணை பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி கூறியதாவது: தேசிய ஜனநாயக கூட்டணி வளர்ச்சியின் குறியீடு. திமுக கூட்டணி ஊழலின் குறியீடு. செந்தில்பாலாஜி, கனிமொழி, ஆ.ராசா ஆகியோர் ஜெயில் டு பெயில் மற்றும் பெயில் டு ஜெயில் ஆக உள்ளனர். 1 சதவீதம் கூட ஊழலற்ற அரசை மோடி நடத்தி வருகிறார். உலகின் 4வது வளர்ச்சி பெற்ற நாடாக இந்தியாவை மோடி உயர்த்தி உள்ளார்.

இளைஞர்கள், பெண்கள், வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள் என அனைவருக்குமான அரசாக மோடி அரசு உள்ளது. திமுக ஆட்சி குடும்ப ஆட்சி. ஊழல் ஆட்சி ஆகும். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. இரட்டை இலையும், தாமரையும் அமைத்துள்ள தேசிய ஜனநாயக கூட்டணி தேர்தலில் வெற்றி பெறும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.





■ திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம், வடக்கு பச்சையாறு நீர் தேக்கத்திலிருந்து பிசான சாகுபடிக்கு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு, மாவட்ட ஆட்சித் தலைவர் இரா. சுகுமார் தலைமையில், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர். மனோகரன் முன்னிலையில் தண்ணீர் திறந்து வைக்கப்பட்டது.

# பாலமேடு வலையபட்டி ஸ்ரீஉச்சிமாகாளியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம்



அலங்காநல்லூர்.
பிப்.07-

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள வலையபட்டி கிராமத்தில் யாதவர் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட

ஸ்ரீஉச்சிமகாளியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த விழாவில் முதல் நாள் யாக வேள்வி பூஜையில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாஹூதி மங்கல இசை முழங்க கோபூஜை, கணபதி பூஜை மற்றும் தீபாதாரணையும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் காலை மங்கல இசை முழங்க மகா பூர்ணாஹூதி, தீபாராதனை நடைபெற்றது. ராமேஸ்வரம், அழகர்கோவில், காசி, கங்கை, உள்ளிட்ட திருத்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் மேளதாளங்கள் முழங்க யாகசாலையை சுற்றி வலம் வந்து கோபுர உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க கருடன் வானத்தில் வட்டமிட கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து கோவிலில் கருவறையில் உள்ள உச்சிமகாளியம்மனுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு மலர் அலங்காரமும் சிறப்பு பூஜைகளும் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த உள்ளூர் மற்றும் சுற்று வட்டார கிராமத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பூஜை மலர்களும் அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை யாதவர் உறவின்முறை சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.



■ திருப்பூர் மாநகராட்சி பெரியார் நகர் பகுதி பொதுமக்கள், மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி, மாநகராட்சி எதிர்க்கட்சி கொறடா கண்ணப்பன், முன்னாள் கவுன்சிலர் கவிதா குணசேகரன், பகுதி செயலாளர் கேசவன் ஆகியோர் தலைமையில் திருப்பூர் மாநகராட்சி கமிஷனரை சந்தித்து, கோரிக்கை மனு கொடுத்துள்ளனர் அதில் அவர்கள் கூறி யிருப்பதாவது.இங்கு வசிக்கும் குழந்தை மகளிர், முதியோர்களுக்கு உடல் உபாதைகள், காய்ச்சல் மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற பிரச்சனைகள் உள்ளது. இது போதாது என்று புதியதாக தகனமேடை மற்றும் பிணவறை வருவதாக நாங்கள் அறிந்தோம். இதுபோன்ற பல பிரச்சனைகள் எங்களை மீளா துயரத்தில் தள்ளி உள்ளது என பொதுமக்கள் கோரிக்கை மனுவில் கேட்டுக் கொண்டுள்ளனர்.




# மூத்தோர் தடகள போட்டி இந்திய அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு தென்காசி மாவட்ட ஆட்சியர் சான்றிதழ் வழங்கி பாராட்டு

திருவனந்தபுரம்,
பிப்.7-

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அகில இந்திய 46வது மூத்தோர் தடகள போட்டி நடைபெற்றது. இவற்றில் வீரசிகாமணி அரசு மேல் நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியை மற்றும் ழிசிசி பயிற்றுநர்

D. கவிதா தமிழகத்தில் இருந்து கலந்து கொண்டு 400மீட்டர் தடை தாண்டும் ஓட்டப் போட்டியில் அகில இந்திய அளவில் பெண்கள் பிரிவில் மூன்றாவது இடம் பிடித்து தமிழகத்துக்கு பெருமை சேர்த்து உள்ளார். முதல் இடத்தை கோவா மாநிலத்தை சேர்ந்த அல்சிரா லசர்டா என்பவரும், K.V லேகா(கேரளா) இரண்டாம் இடத்தையும், D. கவிதா(தமிழ்நாடு) மூன்றாம் இடத்தையும் பிடித்தார். வெற்றி பெற்றவர்களை தமிழ் மூத்தோர் தடகள சங்க தலைவர் கிருஷ்ணசாமி வாண்டையார் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் IAS, வீரசிகாமணி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை பியூலா சாந்தினி, Sri கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் ந.பழனி செல்வம் ஆகியோர் பாராட்டினர் மற்றும் பெற்றோர் ஆசிரியர்கள் மாணவசெல்வங்கள் பாராட்டினர்.



# திமுகவின் தேர்தல் அறிக்கை மார்ச் முதல் வாரத்தில் வெளியாகிறது

சென்னை, பிப்.7-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடக்க உள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளை திமுக முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது. தேர்தல் அறிக்கை தயாரிக்க கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி.தலைமையில் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு தரப்பின் கருத்துகளை கேட்டறிந்து வருகிறது.

அதன்படி திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம் கடந்த 2 நாட்களாக சென்னை அறிவாலயத்தில் நடைபெற்றது. 2வது நாளான நேற்று கூட்டத்தில் குழுவின் தலைவர் கனிமொழி மற்றும் இதர உறுப்பினர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில், நெட்வொர்க்கர்ஸ் வெல்பேர் அசோசியேஷன், முஸ்லிம் உரிமை பாதுகாப்பு கழகம், அனைத்து தலித் கிறிஸ்தவர்கள் சமூக நீதிக்கான கூட்டமைப்பு, தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், வணிகர்கள், பெொதுமக்கள் என பலரும் தங்கள் கோரிக்கைகளையும், மனுக்களையும் அளித்தனர்.

அதன்பின் கனிமொழி எம்பி பேசுகையில், ‘‘மக்களின் கருத்துகளை கேட்டறிந்துதான் இந்த தேர்தல் அறிக்கையை உருவாக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். அந்தவகையில் மக்களுடன் தொடர்ந்துபயணிக்கும் சமூக அமைப்புகளின் ஆலோசனைகளையும் பெற்று வருகிறோம். உங்கள் கருத்துகள் பரிசீலிக்கப்பட்டு நிச்சயமாக ஏற்கப்படும்’’ என்றார்.

இதற்கிடையே திமுகவின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழியை, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் பொருளாளர் ஏ.இப்ராஹிம் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் நேற்று சந்தித்தனர். அப்போது முஸ்லீம்கள் தனி இடஒதுக்கீட்டை 5 சதவீதமாக உயர்த்துதல். கல்விக் கடன், தொழிற் கடனுதவியை வட்டியின்றி வழங்குதல் உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கியமனுவை தேர்தல் அறிக்கையில் சேர்க்கக் கோரி கனிமொழி யிடம் வழங்கினர்.

அவற்றை பரிசீலித்து அறிக்கையில் சேர்ப்பதாக குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த அறிக்கை தயாரிக்கும் பணிகளை முடித்துமார்ச் முதல் வாரத்தில் தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் எனகட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# கடந்த திமுக ஆட்சியின்போது புதிய குடி தண்ணீர் இணைப்புகளுக்கு டெபாசிட் தொகையை நானே செலுத்தி பிரச்சனையை தீர்த்து வைத்தேன் அமைச்சர் ஐ.பெரியசாமி



சின்னாளபட்டி, பிப்.7-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட சித்தையன்கோட்டை பேரூராட்சி, சேடபட்டியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் மூலம் ரூ. 1 கோடியே 24 லட்சம் மதிப்பில் தார் சாலைகள் அமைத்தல், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் மூலம் ரூ. 1 கோடியே 10 லட்சம் மதிப்பில் தார்ச்சாலைகள் அமைத்தல், மாநில நகர்ப்புற கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டம் மூலம் ரூ. 49 லட்சம் மதிப்பில் தரைமட்ட தொட்டி மற்றும் 500 புதிய குடிநீர் இணைப்பு வழங்குதல், கனிம வளம் மற்றும் சுரங்கத்துறை ூ 2025 ூ 2026 திட்டம் மூலம் ரூ. 1 கோடியே 3 லட்சம் மதிப்பில் தார்ச்சாலைகள், பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல் உட்பட ரூ. 3 கோடியே 86 லட்சம் மதிப்பிலான நலத்திட்டப் பணிகளுக்கான பூமி பூஜை விழா சேடபட்டியில் நடைபெற்றது. விழாவிற்கு பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயபால் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொண்ணு முரளி வரவேற்றார். திமுக மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், துணைத் தலைவர் ஜாகீர்உசேன், பேரூர் கழக செயலாளர் சக்திவேல், சிறுபான்மையினர் அணிணையைச் சேர்ந்த ரபீக் மைதீன், மாவட்ட பிரதிநிதி சௌந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நலத்திட்டப் பணிகளை துவக்கி வைத்துவிட்டு, பொதுமக்கள் மத்தியில் பேசும்போது சித்தையன்கோட்டை பகுதி விவசாயிகள் நலன் கருதி, சிமெண்ட் வாய்க்கால், நீர்வரத்து வாய்க்கால், தார்ச்சாலை வசதி உட்பட அனைத்து வசதிகளும் செய்து கொடுப்பட்டுள்ளது. குறிப்பாக குடி தண்ணீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வண்ணம் கோடிக்கணக்கான நிதியில் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த திமுக ஆட்சியின்போது புதிய குடி தண்ணீர் இணைப்புகளுக்கு ஒரு பகுதி மக்களுக்காக டெபாசிட் தொகையை நானே செலுத்தி, அவர்களின் குடி தண்ணீர் பிரச்சனையை தீர்த்து வைத்தேன். இன்று கேட்டதை கொடுக்கும் வள்ளல்போல் திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் நமக்கு வேண்டிய நிதியை வழங்கி வருவதால் நலத்திட்டப் பணிகள் 100 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார். சித்தையன்கோட்டை பகுதி பொதுமக்கள் எந்த கோரிக்கை மனு கொடுத்தாலும் அவை உடனடியாக நிறைவேற்றி கொடுக்கப்படும், இது உறுதி என்றார். நிகழ்ச்சியில் முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தங்கப்பாண்டியன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் போடிகாமன்வாடி நாகலெட்சுமி சசிகுமார், வார்டு உறுப்பினர்கள் தியாகு (எ) முத்துக்குமார், லாவண்யா சுரேஷ், புஷ்பா சாந்தி, மற்றும் தலைமை எழுத்தர் முரளி, துப்புரவு ஆய்வாளர் அபுபக்கர், கணக்காளர் கரீம்சேட், பேரூர் மாணவரணி அமைப்பாளர் பாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல்லில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) சார்பில் மணிக்கூண்டு அருகில் ஆறு வழி முழுமுனைப் இருசக்கர வாகன பிரச்சாரம் மாவட்ட செயலாளர் கே. பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.



## மடத்துக்குளம் 11 ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு மாத ஊதியம் உயர்வு

மடத்துக்குளம், பிப்.7-

மடத்துக்குளம் 11 ஊராட்சி தூய்மை பணியாளர்களுக்கு மாதஊதியம் உயர்த்திய தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மாத ஊதியம் உயர்த்தி வழங்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினரும், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஈஸ்வர சாமி அவர்கள் இல்லத்தில் பரிந்துரை செய்த எம்பி அவர்களுக்கு தூய்மை பணியாளர்கள் சார்பாக நன்றி தெரிவித்தார்கள். இதன் தொடர்ச்சியாக எம்பி அவர்கள் தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். சமபந்தி விருந்தில் தூய்மை பணியாளர்களுடன் எம்பி உணவு உண்டார். இந்நிகழ்ச்சியில்வட்டார வளர்ச்சி அதிகாரி, ஊராட்சி செயலாளர்கள்,ஒன்றிய செயலாளர்கள்மற்றும் சார்பணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



## வாடிப்பட்டியில் அதிமுக சார்பில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மரியாதை

வாடிப்பட்டி., பிப்.7-

பேரறிஞர் அறிஞர் அண்ணாவின் நினைவு நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில், பேருந்து நிலையப் பகுதியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, அதிமுக சார்பில் முன்னாள் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கம் தலைமையில், ஒன்றிய செயலாளர் காளிதாஸ் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில்மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வெற்றிவேல், வக்கீல் திருப்பதி, ராஜேஷ்கண்ணா ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், அரியூர் ராதாகிருஷ்ணன், கொரியர்கணேசன், திருமங்கலம் ராமகிருஷ்ணன், ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத், நகரச் செயலாளர்கள் டாக்டர் அசோக்குமார், முருகேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆலயமணி, மாவட்ட விவசாய அணி வாவிடமருதூர் ஆர்.பி.குமார், மற்றும் நிர்வாகிகள் கோட்டைமேடு பாலன்,சோழவந்தான் ஜெயபிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்..



■ திருப்பூர் பாரப்பாளையம் அரசினர் நடுநிலைப் பள்ளியில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்த விழாவில் திருப்பூர் மாவட்ட சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை நிறுவனர் டாக்டர் தர்மராஜ் அவர்களுக்கு தனது இலவச கல்வி சேவையை பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவ பரிசு வழங்கப்பட்டது. அவர் நடத்தும் ஓவிய பள்ளியில் படித்த மாணவன் தலைமை ஆசிரியை அவர்களின் படத்தை வரைந்து கொடுத்து அனைவரின் பாராட்டுகளை பெற்றனர்.



■ ஈரோடு மாவட்டம் கொடுமுடி தாலுக்கா ஊஞ்சலூரில் அமைந்துள்ள ஆதவ் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்வில், டாக்டர் பாலசுப்ரமணியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

## பிரதமரை தாக்க திட்டம் சேலத்தில் பாஜக மாநில துணைத் தலைவர் கே.பி. ராமலிங்கம் பேட்டி

சேலம், பிப்.7-

சேலம் தாதகாப்பட்டி பகுதியில் தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி சார்பில் மக்களுக்காக மக்களிடம் இருந்து கருத்து கேட்கும் நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியை தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி மாநில துணைத்தலைவர் கே. பி. ராமலிங்கம் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். பின்னர் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை எழுதி அங்கு வைக்கப்பட்டிருந்த பெட்டியில் போட்டனர். இதன் பின்னர் தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி மாநில துணைத்தலைவர் கே பி ராமலிங்கம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார் .



அப்போது அவர் கூறியதாவது,

மிகுந்த பரபரப்பான சூழ்நிலையில் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக படுகொலை செய்து உள்ளனர். கட்சியின் தகுதியை தராதரத்தை இழந்துள்ளனர்.

அவர்கள் செய்தது கேவலமான அரசியல் நாடகம் என்பதை சொல்வதை விட, அரசியல் விதிமுறைகளை மீறுவதற்கு தயாராக இருந்தனர் என்று தான் கூற வேண்டும்.

பிரதமரின் பதிலுரையை நிறுத்தி வையுங்கள் என்று சொல்லுகிற அளவிற்கு பேரவையின் தலைவர் ,

தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபட முயற்சித்தனர் என தெரிவித்திருக்கிறார். நாடாளுமன்றத்தில் மக்களவையில் 1996 நான் பணியாற்றியவன். மாநிலங்களவையிலும் நான் பணியாற்றியுள்ளேன். நான்கு பிரதமர்களின் பட்ஜெட் உரையை கேட்டறிந்தவன். தற்போது பேரவை தலைவரின் குற்றச்சாட்டுக்கு காங்கிரஸ் உள்ளாகியுள்ளது. இதற்கு காங்கிரஸ் கட்சி காரணமாக அமைந்திருக்கிறது. கட்சியின் தலைவர் தெளிவான வழிபாடு இல்லாததுதான் இந்த நிகழ்ச்சி. பிரதமரை தாக்க கூட அவர்கள் தயாராக இருந்தனர் என கூறுகிறார்கள்.

இதனால் அமலி ஏற்படும் என எண்ணி முடிவு செய்து இருக்கிறார்கள். இது உலக அரங்கில் இந்த அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டிருந்தனர் நல்ல வேளையாக ஓம் பிர்லா சாமர்த்தியத்தால் தடுக்கப்பட்டு அவரே பதில் உரையை படித்துள்ளார். இவர்கள் இது போன்ற எத்தனை செயல் செய்தாலும் நாட்டின் நலன் கருதி நமது பிரதமர் செயல்படுவார். மத்திய பட்ஜெட்ல் சுங்கவரி இல்லாமல் பொருட்களை வெளிநாட்டில் விற்க முடியும். நேரடி வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

பட்ஜெட்டில் சாதாரண அறிவிப்புகள் மட்டுமல்ல. எதிர்கால இளைஞர்களின் வளர்ச்சியை, கருதி கல்வி பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. தேசத்தை காக்க வேண்டும் என்றால் தமிழகத்தை வெல்ல வேண்டும். பேரவை தலைவர் ஆதாரத்துடன் சொல்லி இருக்கிறார் . இதனால் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பணியாற்ற அனுமதிக்க கூடாது.

மார்ச் 1ஆம் தேதி தமிழகத்திற்கு பிரதமர் வந்து சிறப்புரையாற்ற உள்ளார். இந்த நிகழ்ச்சி திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்குள் நடக்க உள்ளது. எங்களது அணியின் தலைவர் தேசிய ஜனநாயக கட்சி தலைவர் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தான் பேச்சுவார்த்தை நடத்துவார். பாரதிய ஜனதா கட்சி பொருத்தவரை தமிழகத்தில் நடக்கும் தேர்தலுக்கு நாங்கள் தலைமையல்ல.

கமலஹாசன் நிதி அமைச்சர் பற்றி பேசி இருக்கிறாரே என கேட்டதற்கு,

கமலஹாசனை தேர்வு செய்த தமிழக மக்களின் குற்றம். திமுகவிற்கு வாக்களித்த மக்களின் குற்றம். இதனால் தான் கமலஹாசன் தேர்வு செய்யப்பட்டார். இவ்வாறு தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி மாநில துணைத்தலைவர் கேபி ராமலிங்கம் பேட்டி அளித்தார்.

## ஈரோடு மொடக்குறிச்சி பச்சாம்பாளையம் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் திருவிழா

ஈரோடு, பிப்.7-

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியம், புஞ்சை காளமங்கலம் கிராமம், பச்சாம்பாளையம் அருள்மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் திருவிழா 27.01.2026 செவ்வாய் பூச்சாட்டுதலுடன் விழா துவங்கியது, அதனை தொடர்ந்து 29.01.2026 வியாழன் கம்பம் நடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. 05.02.2026 வியாழன் மதியம் காவேரி ஆற்றிற்கு சென்று தீர்த்தம், பால்குடம், காவடி மற்றும் அக்கினி கும்பம் எடுத்து வந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் நடைபெற்றது. இரவு மாவிளக்கு பூஜை, பொங்கல் பூஜை மற்றும் கம்பம் விடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது



06.02.26 வெள்ளி காலை சிறுவர், சிறுமியர்கள் மற்றும் பெண்களுக்கான விளையாட்டு போட்டி நடைபெற்றது, மாலை மஞ்சள் நீராட்டு விழா திருவீதி உலா நிகழ்ச்சி மற்றும் ஊஞ்சல் பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது

07.02.2026 சனிக்கிழமை மாலை விளையாட்டு போட்டியில் பங்கு பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

இரவு மறுபூஜை மற்றும் எடுத்துக்காட்டு ஏலம் நடைபெறும்.கோவில் திருவிழா நிகழ்ச்சிகள் ஊர் தர்மகர்த்தா சரவணன் தலைமையில், ஊர் பொதுமக்கள் மற்றும் உதயம் இளைஞர் நற்பணி மன்றம் சார்பாக நடைபெற்றது. கோவிலில் காப்பு கட்டி திருவிழா நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடத்தியவர் கோவில் பூசாரி மணிகண்டன், சபாபதி, கம்பத்திற்கு சிறுவர், சிறுமியர்கள் மற்றும் பெண்கள் தீர்த்தம் விட்டு வழிபட்டனர்.



## ஊரக வளர்ச்சித் துறை குருக்கள்பட்டியில் தந்தை பெரியார் சமத்துவபுரம் திறப்பு விழா

தென்காசி, பிப்.7-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் தென்காசி மாவட்டம், மேல நீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட குருக்கள்பட்டியில் தந்தை பெரியார் சமத்துவபுரத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர்.இ.ஆ.ப. சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வீட்டுமனைகளுக்கான ஆணைகள் மற்றும் சாவிகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைகள் சார்பில் பல்வேறு திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள். அதன் அடிப்படையில் 100 வீடுகள், அங்கன்வாடி மையம், நியாய விலை கடை, சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல், 24 மணி நேரம் குடிநீர் வசதி கிடைக்கும் வகையில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, தார் சாலை மின்விளக்குகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளுடன் ரூ.6.20 கோடிமதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர். தெரிவித்தார்.இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு. தண்டபாணி, செயற்பொறியாளர் ஹசன்இப்ராஹிம், மேல நீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மாதவி, ஒன்றிய கவுன்சிலர் ராஜா , ஊராட்சி மன்ற தலைவர்கள் மகேஷ் (குருக்கள்பட்டி), சுமதி (பட்டாடை கட்டி) மற்றும் அரசு அலுவலர்கள், பயனாளிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ ஈரோடு மாவட்டம் நம்பியூர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பொன்னமடையை சேர்ந்த ஜெயக்குமார் என்பவர் தென்பாண்டியன் மில் அருகில் சென்று கொண்டிருந்த பொழுது, வழியில் கிடந்த நகைப்பெட்டியை எடுத்து காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். அதில் 21 பவுன் தங்க நகை இருப்பது தெரிய வந்தது. மேலும் நகையை தவறவிட்ட மோகன்ராஜ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நேர்மையை பாராட்டி ஜெயக்குமார் அவர்களை ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேரில் வரவழைத்து பொன்னாடை அணிவித்து வெகுவாக பாராட்டினார்.












SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000